## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - 2013

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரச்சட்டத்தின் 29(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2:2:1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இணைந்த கம்பனியாகிய வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனியால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் 38 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் நியாயமான அடிப்படையின்றி நானாவித கடன்பட்டோர் மீதியான ரூபா 2,477,500 தொகையில் ரூபா 2,027,500 தொகை அதாவது 82 சதவீதம் ஐயக்கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட பெறுமதியில் ரூபா 1,097,500 தொகையான 02 கடன்பட்டோர் மீதிகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 77,500 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன் படி, ஐயக்கடனாக மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ள அளவு ரூபா 899,950 ஆகக் காணப்பட்டது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று நிர்மாணச் செயற்பாடுகளுக்குரிய அடிப்படைத் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதற்காக கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 300,000 தொகை செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கடன்பட்டோராக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 5 வருடகால உத்தரவாதத்துடன் ரூபா 6,078,862 கிரயமான காட்சிக்கூடங்கள் நிலையான சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) 1986 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளின் போது அமைச்சு கொள்வனவு செய்த 17 வாகனங்கள் மன்றத்தால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்கள் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது மன்றத்தின் பெயரிற்கு மாற்றப்பட்டிருந்தன. அம்மோட்டார் வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 19,375,000 தொகையான போதிலும் காப்புறுதிப் பெறுமதியான ரூபா 17,850,000 தொகை கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தமையால் ரூபா 1,525,000 குறைவாக வாகனப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மன்றத்தால் பயன்படுத்தப்பட்டுவரும் 15 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயற்சி உபகரணங்களாக வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு பயிற்சி உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) காசுப்பாய்ச்சற் கூற்றில் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக ரூபா 4,086,844 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் படி, அத் தொகை ரூபா 3,045,243 ஆகக் காணப்பட்டது. இதன் படி, வேறுபாடான ரூபா 1,041,601 தொகையில் ஆண்டின் தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு நலனில் மறைப் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் அரசாங்க நிறுவகங்களின் பெறுவனவுகள் மீண்டுவருபவையாக ஆண்டின் போது இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய பெறுவனவு மீதி ரூபா 29,357,132 தொகையான மறை மீதியொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சால் மீண்டெழும் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 201,288,877 தொகை மிகைத்து செலவினம் பதிவுசெய்யப்பட்டிருந்த காரணத்தால் இப் பெறுமதிக்குரிய மறை மீதியொன்று காணப்பட்டது. இம் மீதியிலிருந்து வெளிநாட்டு அமைப்புப் பெறுவனவு மீதியான ரூபா 2,851,856 தொகை கழிக்கப்பட்டு எஞ்சிய ரூபா 26,505,276 தொகை ஆண்டின் நடைமுறைப் பொறுப்புப் பட்டோலைக்கு மறை மீதியாக உள்ளடக்கப்பட்டு அத் தொகையால் நடைமுறைப் பொறுப்புகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) மேல்மாகாண வருமானச் சேகரிப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 2,909,388 தொகையான இனங்காணப்படாத வருமானம் நிலவியதுடன் இதில் ரூபா 437,467 தொகை 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தானவையாகக் காணப்பட்டன. இதன் படி, அத் தொகையில் ஆண்டின் ஏனைய வருமானம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | 2013 இன் மாவட்ட இளைஞர் வெற்றி விழாவிற்காக இளைஞர் வெற்றிவிருதைத் தயாரித்தல். | 903,500 | எதிர்பார்க்கப்பட்ட தரத்திலும் அளவிலும் வழங்கப்பட்டமைக்கும் முறைப்படி களஞ்சியத்திற்குப் பொறுப்பேற்கப்பட்டு பொறுப்பு வாய்ந்த ஓர் உத்தியோகத்தரின் கண்காணிப்பில் மாவட்ட அலுவலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமைக்கான தகவல்கள். |
| (ii) | மாவட்ட விளையாட்டுப் பொருட்களை விநியோகித்தல் | 3,655,000 | ஒவ்வொரு விளையாட்டுக் கழகங்களுக்காகவும் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களின் அளவு மற்றும் வகைகள் தொடர்பான விபரம். |

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து அறவிடப்படுவதற்குள்ள ரூபா 538,950 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெள்ளம் மற்றும் மண்சரிவு முற்பணமாக இரு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 2 முதல் 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்கு உரித்தான கடன் தொகையில் மீதியாகக் காணப்பட்ட ரூபா 51,077 தொகையில் ஆண்டின் போது எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | i. நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104(1) | 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான பன்னல பண்ணை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வுக் குறிப்பை ஒப்பிடுகையில் காய்க்கும் 48 தென்னை மரங்களும், 24 தென்னங்கன்றுகளும் தேக்கு மற்றும் பலா மரம் 1 படி பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் நிறுவகத்தால் அப் பற்றாக்குறை இனங்காணப்பட்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | ii. நிதிப் பிரமாணம் 109 | பொருள் மெய்மையாய்வுச் சபையால் இனங்காணப்பட்ட ரூபா 361,740 தொகையான பொருள் பெறுமதிகளின் பற்றாக்குறை புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் முன்னைய ஆண்டு வருமானச் செலவினக் கணக்கு மீதிகளில் பதிவழிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.5 ஆம் வழிகாட்டி | தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக் கூடாரத்தை நிர்மாணிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கிரயம் ரூபா 7,225,680 தொகையான மதிப்பீட்டில் ஒவ்வொரு செலவின விடயமும் விபரமாகச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் விலைகள் தொடர்பாக முறையான மதிப்பீடு இன்றி கொள்வனவுக் குழுவால் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. |

**2.5 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்**

பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட கணக்கு வைக்கப்பட்டிராத சொத்துக்கள் முறையான வகையில் மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்குவைக்கப்படுவதற்குப் பதிலாக பொருள் மெய்மையாய்வுச் சபையால் வழங்கப்பட்ட ரூபா 1,158,689 கூட்டுத்தொகையான பெறுமதி முன்னைய ஆண்டின் வருமானச் செலவினக் கணக்கிலும் சொத்துக் கணக்கிலும் சீராக்கப்பட்டிருந்தன.

**3. நிதி மீளாய்வு**

**3:1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் போது மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 253.28 மில்லியன் பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 73.71 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இதன் படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 179.57 மில்லியன் தொகையால் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த வீழ்ச்சி தொடர்பில் செயற்பாட்டு மற்றும் இளைஞர் அபிவிருத்திச் செலவினம் ரூபா 333 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

**3.2 மன்றத்திற்கு எதிராக தொடரப்பட்ட சட்ட விடயங்கள்**

மன்றத்திற்கு எதிராக தொடரப்பட்ட 19 வழக்குகளும் மன்றம் முறைப்பாட்டாளராகி தொடரப்பட்டிருந்த 13 வழக்குகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பண்ணைச் செயற்பாட்டுக் கணக்கின் படி, 12 பண்ணைகளின் ஆண்டிற்கான நட்டம் ரூபா 3,496,409 ஆகக் காணப்பட்டது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் எய்தப்பட்டிருக்கவில்லை.

(i) இனைஞர் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 5.6 மில்லியன் அளவு இளைஞர் யுவதிகளின் தகவல்கள் உள்ளடங்கிய உள்ளக மென்பொருள் முறைமையை ஸ்தாபிப்பதற்கு ரூபா 4,244,000 தொகையான வருடாந்த பாதீட்டு ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படாது ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையும் ''யௌவன திலின'' அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ii) இளைஞர் அணியை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிராந்தியத்திற்கு ஒத்துப்போகும் இளைஞர் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இளைய தலைவர்களின் கருத்துக்களையும் தீர்மானங்களையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ரூபா 870,000 தொகை செலவில் ஒரு மாவட்டத்திற்கு 04 நிகழ்ச்சித்திட்டங்கள் படி 104 நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 429,410 தொகை செலவிடப்பட்டு 51 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(இ) குருநாகல் மாவட்டத்தின் பயிற்சி நிலையம் மற்றும் பிராந்தியப் பயிற்சி நிலையங்களில் செயலாற்றல் தொடர்பாகக் கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) கல்கமுவை, பொல்கஹவெல மற்றும் மாவத்தகம போன்ற பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படுகின்ற 08 பயிற்சிப் பாடநெறிகளுக்குரிய மாணவர்களின் எதிர்பார்த்த பங்கேற்பு மற்றும் உள்ளபடியான பங்கேற்பு 50 சதவீத அளவில் குறைந்த நிலையில் காணப்பட்டது.

(ii) அதுகல்புர பயிற்சி நிலையத்தின் மீளாய்வாண்டின் போது 17 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அதுகல்புர பயிற்சி நிலையத்தின் மூலம் பூங்கா அலங்கரிப்பு பாடநெறி 100 மாணவர்களுக்காக 04 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் 38 மாணவர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்றத்தால் இலங்கை இளைஞர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சேவை தொடர்பான தகவல்களை உடனடியாக இளைஞர் சமுதாயத்திற்கு வழங்கும் நோக்கில் ரூபா 1,051,008 தொகையை அடிப்படையாகச் செலவிட்டு இலங்கை நியூஸ் அப் சேவை ஸ்தாபிக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் போட்டி விலைகள் கோரப்படாது துறை தொடர்பாக சேவை வழங்கும் ஓர் நிறுவகம் அல்லாத வரையறுக்கப்பட்ட செலசினே தொலைக்காட்சி நிலையத்திற்கு இச் செயற்பாடு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந் நிறுவகத்தால் வேறு தனியார் கம்பனி ஒன்றின் மூலம் இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உரிய செயற்பாடு முறைப்படி மேற்கொள்ளப்படுவதற்கு விடயம் தொடர்பான நிபுணரின் உறுதிப்படுத்தலின்றி மன்றத்தால் சகல பணமும் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கிடப்பட்ட குழு 14 – 30 வயதிற்கு இடையே 1,000,000 அளவான இளைஞர் சமுதாயமான போதிலும் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி 2013 செப்தெம்பர் 25 ஆம் திகதியில் வலையமைப்பைக் கொண்ட இணையதளத்தின் படி இச் சேவையைப் பெற்றுக்கொண்டிருந்த சேவை நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 100 – 500 இற்கு இடைப்பட்ட அளவில் காணப்பட்டது. 2014 சனவரி 30 ஆம் திகதி வரையில் அந்த அளவு 10 – 50 இற்கு இடைப்பட்ட அளவில் காணப்பட்டது.

(iii) சேவையுடன் தொடர்புபட்ட ஸ்ரீ லங்கா யுத் நியூஸ் அப் இணையதளத்தின் தகவலை நாளதுவரையாக்கப்படுவதற்கும் தகவல்களை உடனுக்குடன் கையடக்கத் தொலைபேசியினூடாக வழங்குவதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டிராததுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எய்தியிராமையால் செலவிடப்பட்ட கிரயம் விளைவற்றதாகிக் காணப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது உருவாகிவரும் இளைஞர் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) நிகழ்ச்சித்திட்டத்தின் படி 2012 ஆகஸ்ட் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட 07 ஆம் கட்டத்தின் கீழ் 2013 சனவரி மாதத்தின் போது இச் செயற்பாடு பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் அச் செயற்பாடு 2014 யூன் 27 ஆம் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்தது. இதற்காக விபரம் அடங்கிய மொத்தக் கிரய மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிராததுடன் அதற்காக சில சந்தர்ப்பங்களின் போது ரூபா 42,658,439 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) இதற்குரியதாக 2012 ஆகஸ்ட் 30 ஆம் திகதி ஹொட்டேலில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1,065,768 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிக்கு ஏற்பட்ட தாக்கம் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 02 ஆம் கட்டத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டம் தொலைக்காட்சியின் மூலம் ஒளிபரப்பப்படுவதற்காக முறையான நடைமுறையின்றி தனியார் ஊடக நிறுவகம் ஒன்றைத் தேர்ந்தெடுத்திருந்ததுடன் இதற்காக ரூபா 6,962,800 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) இத்தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 10,267,891 கூட்டுத்தொகை வெளித்தரப்பினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான விபரம் அடங்கிய கிரய மதிப்பீடொன்று நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டிராததுடன் அந் நிறுவகத்தால் வழங்கப்பட்ட கிரய மதிப்பீடு, மதிப்பீடொன்று இன்றி அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் இளைஞர் பாராளுமன்ற நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரித்தான பாராளுமன்ற வடிவமைப்பைத் தயாரிப்பதற்காக ரூபா 6,923,699 தொகை வெளிநிறுவகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் நடாத்தப்படும் ஒவ்வொரு பாராளுமன்றக் கூட்டத்தொடருக்காகவும் அவ் வடிவமைப்பைத் திருத்துதல், பொருத்துதல்கள் மற்றும் மீளக் கழற்றி அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்காகவும் அந் நிறுவகத்திற்கு சிக்கனமற்ற முறையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்பட்டன.

(i) இச்செயற்பாட்டிற்கு உரித்தாகக் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையும் ஆரம்ப நிகழ்வு நடாத்தப்பட்ட காலப்பகுதியின் போது மாத்திரம் செல்லுபடியாகியிருந்தது.

(ii) 2011 யூலை மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை நடாத்தப்பட்ட 12 அமர்வுகளுக்காக பாராளுமன்றத்தின் வடிவமைப்பு அகற்றப்பட்டு மீளப் பொருத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 32,474,374 கூட்டுத்தொகையான பணமும், திருத்த வேலைகளுக்காக ரூபா 2,000,000 தொகையான பணமுமாக ரூபா 34,474,374 கூட்டுத்தொகையானது செய்யப்பட்ட வேலை தொடர்பாக முறையான மதிப்பீடும் உறுதிப்படுத்தலும் இன்றி செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2012 – 2014 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படுவதற்காக அரசாங்க உத்தியோகத்தரின் பெயரில் ரூபா 191,853 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்ததுடன் அறிக்கை கணனிமயமாக்கப்பட்டு சரிபார்க்கும் செலவினமும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) நிறுவகத்தின் திட்டப் பிரிவு இருக்கையில் வெளித்தரப்பினரின் மூலம் அந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் சக்தி, நலிவுகள், சந்தர்ப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டிணைந்த திட்டத்திற்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் ஏற்ற வகையில் நிறுவகத்தின் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் நிறுவகத்தில் தொடர்ந்து செயற்பட்டுவந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் 2013 ஆம் ஆண்டின் போத அபிவிருத்தித் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது.

(உ) மன்றத்தினாலும் அதனோடிணைந்த பயிற்சி நிலையங்களின் மூலமும் ஆண்டின் போது 82 முழு நேரப் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. இவற்றில் 26 பாடநெறிகளுக்கு மதிப்பீட்டு நிலைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் இன்மையால் மதிப்பீட்டுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தது. இவ்வாறே குருநாகல் மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் 04 பயிற்சி நிலையங்களில் 3 நிலையங்களின் மதிப்பீடு (NVQ) நிலையில் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு தேவையான நிதி வசதிகளும் பயிற்சி உபகரணங்களும் இன்மை கணக்காய்வு களப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

### 4.3 செயற்பாட்டுத் செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வெளிநாட்டு அமைப்புகளால் பெறப்பட்ட பெறுமதி ரூபா 23,030,865 தொகையான மானியத் தொகையில் ரூபா 5,174,109 தொகை 1 வருடத்திற்கும் 7 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது உரிய நோக்கத்திற்காக செலவிடப்படாது விளைவற்று மீளாய்வாண்டின் போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) மன்றத்தால் அதன் 09 பிராந்திய அலுவலகங்களின் செலவினத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 421,319,804 கூட்டுத்தொகை கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது. அப் பெறுமதி மன்றத்தின் வருடாந்தச் செலவினத்தில் 28 சதவீதமாகும். எனினும், இக் கட்டுநிதியை விடுவிப்பது மற்றும் தீர்க்கப்படுவது, வருமானத்தைச் சேகரிப்பது மற்றும் கணக்கீடு செய்யப்படுவது தொடர்பாக போதிய உள்ளகக் கட்டுப்பாடு ஒன்று செயற்படுத்தப்படாமை பின்வரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது.

(i) முறையான அதிகாரத்துடனான உத்தியோகத்தர்களுடாக நிதி நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பதவியணியினருக்கிடையே போதிய வேலைப் பகிர்வு இருக்கவில்லை.

(iii) கட்டுநிதித் தீர்ப்பனவு மற்றும் செலவினம் தொடர்பாக முறையாக கண்காணிப்பு இருக்கவில்லை.

(இ) அறவிடப்பட வேண்டிய நட்டத்தை பட்டோலையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தரிடமிருந்து 2010 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 327,425 தொகையான கடன் மீதி மாதாந்தம் ரூபா 1,000 படி அறவிடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மேற்குறித்த மீதியை அறவிடுவதற்கு 27 ஆண்டு காலம் எடுக்கும். உரிய உத்தியோகத்தரின் சேவைக் காலத்துடன் ஒப்பிடுகையில் இந் நட்டத்தை ஈடுசெய்ய முடியாமை அவதானிக்கப்பட்டது.

### 4.4 நோக்கங்களுக்கு முரணான கொடுக்கல்வாங்கல்கள்

2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத, பூர்வாங்கத் திட்டமும் செலவின மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டிராத, வருடாந்த உத்தியோகத்தரின் நலன் ஒன்றுகூடல் நடாத்தப்படுவதற்காக ரூபா 2,863,785 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 1,323,000 தொகை 2100 உத்தியோகத்தர்களுக்காக மாலைநேர சிற்றுண்டி மற்றும் இராப்போசனம் வழங்கப்படுவதற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிஸ்கோ வீடியோ பிரிவின் கலைஞர்களின் திறனை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் செயற்பாடுகள் வெளிப்படும் வகையில் 20 நிமிடக் குறுந்திரைப்படங்கள் தயாரித்தல், அப் பிரிவால் மேற்கொள்ளப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் தேவையான வளங்கள் அப் பிரிவில் இன்மைக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டு முறையான நடைமுறைகளின்றி வேறு நிறுவகம் ஒன்றால் அச் செயற்பாடு ரூபா 2,000,000 தொகையான செலவினத்தை ஏற்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவசர செயற்பாடாகக் கருதி தனியார் நிறுவகம் ஒன்றால் இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதனைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கப்படுவது எதிர்பார்க்கப்பட்ட தினத்தைப் பார்க்கிலும் ஒரு மாதமளவு தாமதமாகியிருந்தது.

(ஆ) சர்வதேச இளைஞர் கருத்தரங்கிற்கு இணையாக மாத்தறையில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட இளைஞர் மைதானத்தை நிர்மாணிப்பதற்காக வாஸ்து சாஸ்திர நிர்மாணிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் பத்திரிகை விளம்பரத்தை வெளியிடுவதற்காகவும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 159,968 தொகையும் ஆலோசனைக் கட்டணமாக ரூபா 1,086,750 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அக் கருத்தரங்கு 2014 மே மாதம் நடாத்தப்பட்டதுடன் உரிய செயற்பாட்டைப் பூர்த்திசெய்யாது கைவிடப்பட்டிருந்தது.

(இ) பாணந்துறையில் இளைஞர் பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக மூல வரைபடத்திற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 575,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந் நிர்மாணிப்புகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

இசைப் பாடநெறிகளை நடாத்துவதற்கு தேவையான பல்வேறு வகையான 34 இசை வாத்தியங்கள் குருநாகல் மாவட்ட அலுவலகத்தில் 05 ஆண்டு காலப்பகுதி முதல் விளைவற்றுக் களஞ்சியத்தில் காணப்பட்டன.

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்திற்கு முரணான வரி இலக்கமும் குறிப்பிடப்பட்டிராத பற்றுச்சீட்டுக்களுக்காக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக (NBT) ரூபா 969,211 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டமை, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகையும் உள்ளடக்கப்பட்டு பெறுமதி சேர் வரி கணிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 113,695 கூட்டுத்தொகையான பணம் பெறுமதி சேர் வரியாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டதாகவும் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனி, வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (சங்கீதம்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (நடனம்) கம்பனியின் பங்கு முதலீட்டிற்காக ரூபா 4,032,360 கூட்டுத்தொகை 1985 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது செலவிடப்பட்டிருந்தது. அம் முதலீட்டிற்காக எவ்வித நலனும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மன்றத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இவ்வாறே வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (சங்கீதம்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (நடனம்) கம்பனி என்பன எவ்வித செயற்பாடுமற்ற பெயரளவிலான வடிவிலான நிறுவகமாக இருந்தன.

**4.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லெவ்வேகொட பயிற்சி நிலையத்தின் மலசலகூட முறைமையை நிர்மாணித்து மின்சார முறைமை நவீனமயமாக்கும் ஒப்பந்தம் ரூபா 841,890 தொகையான பெறுமதிக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2005 திசெம்பர் 26 ஆம் திகதி வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதமான ரூபா 168,378 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) 2005 திசெம்பர் 29 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதியான ரூபா 464,780 தொகையில் ரூபா 116,195 தொகை கழிக்கப்பட்டிருந்தது. மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 52,182 தொகையான முற்பணத் தொகை அறவிட முடியாதெனக் கருதி 2013 ஆம் ஆண்டின் போது ஐயக்கடனாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரரால் 2006 திசெம்பர் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 732,749 தொகையான இறுதிப் பட்டியல்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தராலோ அல்லது பொறியியலாளராலோ உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அப் பட்டியலுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கோ அல்லது ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டு முறைப்படி ஒப்படைக்கப்பட்டமைக்கான தகவல்கள் கோவையில் இருக்கவில்லை.

(ஆ) அனுராதபுரம் இளைஞர் விடுதி மற்றும் இளைஞர் சம்மேளன அலுவலகத்தின் நிர்மாணிப்புச் செயற்பாட்டிற்கு உரித்தான ஒப்பந்தக்காரர்கள் மூவரிடமிருந்து கேள்வி கோரப்பட்டதை அடுத்து ஆகக் குறைந்த விலையான ரூபா 8,089,950 தொகையைச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரரால் வலிதற்ற விலை மனுப் பிணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் தேவையான தகைமைகளைக் கொண்டிராத காரணத்தால் இக் கேள்விளை வழங்குவது ஏற்புடையதல்ல எனவும் அடுத்துள்ள

ஆகக் குறைந்த விலை ரூபா 8,297,230 தொகையைச் சமர்ப்பித்த மனுதாரருடன் விலை குறைக்கப்படுவதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வது ஏற்றதெனவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்யப்பட்டு இருக்கையில் அவ்வாறு செய்யாது கேள்விச் சபையால் ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மேலும் கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) இவ் ஒப்பந்தம் 2012 பெப்ரவரி 02 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அடிப்படை ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக திறந்த சிற்றுண்டிச் சாலை, செலூன் மற்றும் வாகனத் தரிப்பிடப் பகுதி என்பன நிர்மாணிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டதை அடுத்து இதற்காக ரூபா 3,536,220 தொகையான கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இச் செயற்பாட்டிற்காக மீள விலைகள் கோரப்படாது மேலதிக வேலையாகக் கருதப்பட்டு மேற்குறித்த ஒப்பந்தக்காரரிடமே மேற்குறித்த அச் செயற்பாடு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது அடிப்படை ஒப்பந்தப் பெறுமதியின் 43.71 சதவீதமாகக் காணப்பட்டது.

(iii) பயிற்றப்படாத ஊழியர்களைப் பயன்படுத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், பெருமளவிலான தாமதங்கள் ஏற்படுவதாகவும் ஒப்பந்தத்தை இடைநிறுத்துமாறும் பொறியியல் ஆலோசனை நிறுவகத்தால் 2013 மே 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் தலைமைப் பதவிநிலை உத்தியோகத்தர் பதவிகள் உள்ளடங்கலாக 50 பதவிநிலைத்தர உத்தியோகத்தர் பதவிகளின் வெற்றிடம் நிலவியதுடன் அப் பதவிக்காக வேலை மேவுகை அடிப்படையில் இதற்குக் குறைவான தரங்களில் உள்ள உத்தியோகத்தர்களும் வெளியிலிருந்து சேர்க்கப்பட்ட 27 உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது பதவிநிலை உத்தியோகத்தர் எண்ணிக்கையில் 35 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) மேலும் புத்தகப் பேணுனர்களாக நியமனம் பெற்றிருந்த 05 உத்தியோகத்தர்கள் பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உதவிக் கணக்காளர்களாகக் கடமையாற்றியிருந்தனர். இவர்களில் 03 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகாலத்திற்கு மேலான காலமாக அவ்வாறு பதில் கடமை அடிப்படையில் கடமையாற்றியிருந்தனர்.

(இ) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2011 மே 09 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/36/04/224/1-1 ஆம் இலக்கக் கடிதத்தின் படி மன்றத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதியில் 16 பதவிகளுக்கு 442 உத்தியோகத்தர்கள் பதவியில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பாதீட்டின் படி மொத்த ஏற்பாட்டுத் தொகையான ரூபா 1400 மில்லியன் தொகைக்கு மேலதிகமாக ரூபா 60 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது இளைஞர் அபிவிருத்தி செலவின விடயத்தின் கீழ் இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலக இளைஞர் கருத்தரங்கை நடாத்துவதற்காக ரூபா 566 மில்லியன் தொகை நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் ரூபா 627 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமையால் நிகழ்ச்சித்திட்டத்திற்கான பெறுவனவை மிகைத்து ரூபா 61 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் நோக்கம் எய்தப்படுவது தொடர்பாக நேரடிப் பங்களிப்பைச் செலுத்தும் 05 பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 221,515,000 கூட்டுத்தொகையான வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகளில் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது ரூபா 131,025,372 கூட்டுத்தொகை
(59.14 சதவீதம்) எஞ்சியிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் சராசரி நிர்வாகச் செலவினத்திற்காக வருடாந்த பாதீட்டின் படி ஏற்பாடு ரூபா 647,000,000 தொகையானதுடன் அத் தொகைக்கு மேலதிகமாக ஆண்டின் போது ரூபா 97,680,568 தொகை மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது ரூபா 26,126,198 கூட்டுத்தொகையான பணம் நிதிப் பிரமாணம் 115(3) இன் கீழ் செலவிடப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்குரிய கடன்கொடுத்தோராக 2014 ஆம் ஆண்டின் ஏற்பாடுகளில் ஏற்கப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 36,930,691 ஆகக் காணப்பட்டது. இந் நிலை பாதீட்டுக் கட்டுப்பாட்டு நோக்கத்தை எய்துவதற்குத் தடங்கலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2012 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம், மன்றத்திடம் இருந்த சகல ஆதனங்களும் சுய நோக்கை மேம்படுத்துவதற்காக மன்றத்தால் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் பேருவளை இளைஞர் நிலைய நிர்மாணிப்பிற்காக 2000 யூலை மாதம் முதல் 50 ஆண்டு காலக் குத்தகைக் கால எல்லைக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 3,300,000 தொகை செலவிடப்பட்டு காணி ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 3,398,200 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டு 13 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நிறுவகத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக அச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் 26 ஆம் பிரிவுகளுக்கு இணங்காத வகையில் முருகண்டி கோயில் புகையிரத நிலைய நிர்மாணிப்பிற்காகச் சேகரிக்கப்பட்ட ரூபா 1,671,900 தொகை 2009 ஆம் ஆண்டு முதல் திறைசேரி அங்கீகாரமின்றி வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(iii) 03 பிரதேசங்களில் இளைஞர் பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பிற்காக மூல வரைபடம் தயாரிக்கப்படுவதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 575,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அந் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கொள்வனவு
(இ) கணக்கீடு
(ஈ) பதவியணி முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) உள்ளகக் கட்டுப்பாடு